அ.வ.எண்: 35/2015 நாள்: 09.03.2026

பி.வா.சா.1 – வேலு

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்தில் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி எத்தனை பங்கு விகிதாச்சாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. தாவா சொத்து வாதிக்கு பூர்வீக சொத்து என்றால் சரிதான், அவர்களது அப்பாவின் சொத்து ஆகும். தாவா சொத்தில் வாதியின் தந்தைக்கு எவ்வளவு பங்கு என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் பூர்வீக சொத்தை தனது மனைவிக்கு இனாமாக கொடுக்க முடியுமா என்றால், அவர் ஜீவனாம்சமாக கொடுத்தார். பூர்வீக சொத்தை எவ்வாறு மனைவிக்கு இனாமாக கொடுக்க முடியும் என்றால் அவருக்கு பாத்தியப்பட்ட பங்கை பொறுத்து கொடுக்க முடியும். வாதியின் தந்தைக்கு உரிய பங்கு எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்து எத்தனாவது இலக்க சொத்தாக உள்ளது என்றால், மேற்படி ஆவணத்தை என்னால் படிக்க முடியவில்லை. (சாட்சியிடம் பி.வா.சா.ஆ.1 ஆவணம் காட்டப்பட்டது) ஆவணத்தை என்னால் படிக்க முடியாத பொழுது நான் எதன் அடிப்படையில் தாவா சொத்தை வாங்கினேன் என்றால் எனது வழக்கறிஞரிடம் அறிவுரை கேட்டு தான் வாங்கினேன். மேற்படி வழக்கறிஞரின் அறிவுரை பெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணம் பெரியநாயகிக்கு காளியம்மாள் எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து காளியம்மாளுக்கு எவ்வாறு பாத்தியம் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை.

3. காளியம்மாளுக்கு எத்தனை சொத்துக்கள் இனாமாக கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 பற்றி தெரியுமா என்றால் தெரியும். (சாட்சியிடம் பி.வா.சா.ஆ.3 ஆவணம் காட்டப்பட்டது) மேற்படி ஆவணத்தில் மாணிக்கம் என்பவருக்கு சொத்து எவ்வாறு சென்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், நான் வழக்கு தாக்கல் செய்யும்போது ஆவணத்தை படித்து பார்த்தேன் தற்பொழுது நினைவில் இல்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணம் கிரைய பத்திரம் என்றால் சரிதான். (சாட்சியிடம் பி.வா.சா.ஆ.4 ஆவணம்

காட்டப்பட்டது) அது யாருக்கு யார் எழுதி கொடுத்தது என்றால், பழனிநாதன் மாணிக்கம் என்பவருக்கு எழுதிக் கொடுத்தது ஆகும். மேற்படி பழனிநாதனுக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், பெரியநாயகியின் மகன் ராமநாதன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார்.

4. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண் 18/1 ஆகும். தாவா சொத்து வாதியின் தகப்பனார் பெரியய்யாவுக்கு எப்படி பாத்தியம் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதியின் தகப்பனாருக்கு எவ்வாறு பார்த்தியம் என்றே தெரியாமல் நான் எப்படி கிரையம் வாங்கினேன் என்றால் எனக்கு படிக்கத் தெரியாததால் ஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்தேன் அவரது அறிவுரையின்படி தாவாசொத்தை கிரையம் வாங்கினேன். நான் எப்பொழுது வழக்கறிஞரிடம் அறிவுரை பெற்றேன் என்றால் 2012 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பாகவே அறிவுரை பெற்றேன். மேற்படி வழக்கறிஞர் அறிவுரையை எழுத்து மூலமாக பெற்றேனா என்றால் இல்லை வாய்மொழியாக தான் பெற்றேன். சர்வே எண் 18/1 சம்பந்தமாக தேவகோட்டை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

5. தற்போது எனக்கு மேற்படி சார்பு நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு பற்றி தெரியுமா என்றால், இப்போது நீங்கள் சொல்லித்தான் எனக்கு

தெரியவந்தது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு விட்டதா என்றால் நிறைவேற்றப்பட்டு விட்டது. பி.வா.சா.ஆ.5 (சாட்சியிடம் பி.வா.சா.ஆ.5 ஆவணம் காட்டப்பட்டது) ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. சர்வே எண் 18/1–ன் மொத்த விஸ்தீரணமான 8 ஏக்கர் 28 செண்ட் –ல் இருந்து தற்போது உள்ள 1ஏக்கர் 65 செண்ட் மட்டும் எவ்வாறு பிரிந்து வந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. கிரைய ஒப்பந்தத்தின்படி ஏற்பட்ட ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தந்தையான பெரியய்யா அம்பலத்தின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வாதியின் வாரிசுக்கிளை விபரம் பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.வாதியின் தந்தை பெரியய்யாவுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தை இனாமாக கொடுக்க முடியாது என்றால் சரியல்ல, ஜீவனாம்சமாக கொடுத்தார். மேற்படி பரிவர்த்தனை இனாமாக நடைபெற்றதா அல்லது கிரையமாக நடைபெற்றதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை ஜீவனாம்சத்திற்காக நீதிமன்றம் ஜப்தி செய்து கொடுத்ததா என்ற விவரம் தெரியுமா என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது.

பெரியய்யா பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தை அவரது மனைவிக்கு இனாமாகவோ அல்லது ஜீவனாம்சமாகவோ கொடுக்க முடியாது என்றால் சரியல்ல.

7. பெரியநாயகியை என் தரப்பு சாட்சியாக நான் விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் அது அவரை கேட்டால் தான் தெரியும். தாவா வழக்கின் மற்ற பிரதிவாதிகள் எனக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால், பழனிநாதன் இறந்துவிட்டார், மற்றவர்களை கேட்டால் தான் தெரியும். தாவா வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பின்புலம் இல்லாத ஆவணங்கள் என்றும், எந்தவித ஆதரவும் இல்லாமல் மேற்படி ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்திற்கும் எந்தவித முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.09 16:09:23 +0530